

# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU




ஜுமுஆ பேருரை

தலைப்பு :

அல் - ஹுஜுராத்:

புறங்கூறுதல் (பகுதி 3)

**27 SEPTEMBER 2019**

**(27 MUHARRAM 1441 A H )**


ஹஸ்ரத் முஹையுதின் அல் கலீஃ.பத்துல்லாஹ்

முனீர் அஹ்மது அஸீம் (அலை)

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**




# AL-Hujurat : Ghibbat (Part 3)

## அல் - ஹுஜுராத்: புறங்கூறுதல் (பகுதி 3)

---

உலகெங்கிலும் உள்ள தனது சஹாபாக்கள் புதிய சஹாபாக்கள் மற்றும் அனைத்து முஸ்லீம்களுக்கும் தனது ஸலாத்தினைத் தெரிவித்தபிறகு, **ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தஷஹுத், தவ்வுத் மற்றும் சூறா∴பாத்திஹா ஓதி “கடந்த வார ஜுமுஆ பேருரையின் தொடர்ச்சியை கிப்பத் பாகம் 3” என்ற தலைப்பில் ஜுமுஆ பேருரையியை வழங்கினார்கள்.

அல்லாஹ்வின் அருளால் கிப்பத் பற்றிய எனது வெள்ளிக்கிழமை பேருரையின் மூன்றாவது பகுதியை நான் தொடர்கிறேன் கிபாத் என்றால் புறம் பேசுவது, மற்றவர்களின் குறைபாடுகளைத் தேடுவது, உளவு பார்ப்பது, சந்தேகிப்பது, மற்றவர்கள் மீது பொய்யான குற்றம் மற்றும் பழியினை சாட்டுவது போன்றவையாகும்........ இந்த பேருரை தொடர்கிறது.

பலமுறை, அப்பாவிகளாகிய உங்கள் சகோதரர்கள் அல்லது சகோதரிகளுடன் பாசாங்குத்தனமான உறவை வைத்திருப்பதன் மூலம், நீங்கள் ஒரு வேடதாரி போன்று ஆகிறீர்கள். பாசாங்குத்தனம் எங்காவது எழும்போது, அங்கிருந்து அது பிற இடங்களிலும் உருவாக வாய்ப்புகள் உள்ளன. அதாவது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திலும் ஒரு சூழ்நிலையிலிருந்து இன்னொரு சூழ்நிலையிலும் அது நுழைந்து விடலாம்.

பாசாங்குத்தனத்தை கடைப்பிடிப்பதை யாராவது பழக்கப்படுத்தும்பொழுது, அந்த பாசாங்குத்தனத்திற்கு பழக்கமுடைய அவருக்கு வழிவகுத்த ஒரு பெரிய காரணம் என்பது கிப்பாத் ஆகிறது. ஒரு நயவஞ்சகர் என்பது ஒருவரின் பின்புறமிருந்து பேசிப்பழகிய ஒரு

வரைக் குறிக்கிறது. ஆனால் அவருக்கு முன்னால் நிற்கும் பொழுது முற்றிலும் நேர்மாறாக கூறுகிறார், இதனால் அவர் தனக்கு ஆதரவாக பேசுகிறார் என்ற எண்ணத்தை அந்த நபருக்கு கொடுக்கிறார் (உண்மையில் அது அவ்வாறல்ல) அவருக்கு முன்னால், நயவஞ்சகர் தனது உண்மையான நோக்கில் இருந்து மிக வித்தியாசமான பல விஷயங்களைச் சொல்கிறார். அது உண்மையல்ல. இதுவேதான் பாசாங்குத்தனம். பிறமக்களிடம் நீங்கள் பாசாங்குத்தனமாக நடந்து கொள்ளும் போது, நீங்கள் ஜாக்கிரிதையாக இருங்கள் ஏனென்றால் இந்த பாசாங்குத்தனம், கொஞ்சம், கொஞ்சமாக உங்கள் நம்பிக்கையிலும் நுழைந்துவிடும். பின்னர் அமீர்சாஹிப் அல்லது நாயீப் அமீர் சாஹிப் அல்லது சதர், மற்றும் ஜமா அத்தின் பொறுப்பாளர்களிடத்தில் பாசாங்குத்தனமான ஒரு உறவை வைத்துக் கொள்ள நீங்கள் தொடங்குகிறீர்கள். ஆகவே ஒரு தனி மனிதனிலிருந்து ஆரம்பித்த இந்த கிப்பத் மற்றவர்களிடத்திலும் பரவலாகி, முடிவில் அது அமைப்பளவில் பாதிக்கிறது. நீங்கள் நிஸாமே ஜமா அத்துக்கு எதிராக பேசும்போது, நீங்கள் உணரவேண்டும் அது மிக பெரிய பாவமாகிறது. ஏனென்றால் இது போன்ற சூல்நிலை எங்கு ஏற்பட்டாலும் நீங்கள் பாசாங்குத்தனமான தன்மையுடன் அல்லாஹ்வின் வழியில் உழைக்கும் மக்களுக்கு எதிராக மோசமாக பேச ஆரம்பித்துவிடுவீர்கள் மேலும் இறை வழியில் உழைப்பவர்களை வெறுப்பதற்கும், அவர்களுடனான ஒத்துழைப்பை விடுவதற்கும் மற்றவர்களை நீங்கள் தூண்டியவர்களாவீர்கள்.

சில நேரங்களில் நீங்கள் அதிகாரிகளுக்கு எதிராக அதாவது இறைவழியில் உழைப்பவர்களுக்கு எதிராக நீங்கள் புறங்கூறும் போது, உங்கள் பேச்சைக் கேட்க்கும் நபர்கள் அவர்கள் மீது ஒரு வெறுப்பை வளர்த்துக்கொள்கின்றார்கள். பின்னர் அவர்கள் இதைக் கூடக் கூறலாம் அதாவது மதம் (இஸ்லாம்) என்றால் இதுதான் என்றால் நாம் விலகிச் செல்வதே நல்லது, அதிலிருந்து நாம் பின்வாங்குவதே மிக சிறந்தது, நிஸாமே ஜமா அத்திலிருந்து என்னை வெளியேற்றியபோது உண்மையில் இதுதான் நடந்தது மௌரிஷியஸ் அஹமதியா முஸ்லீம் ஜமா அத்திலிருந்து ரீயூனியன், மயோட்டா, செஸில்லியஸ் ரோட்ரிக்குலுஸ் போன்ற தீவுகளுக்கு பிரதிநிதிகள் சென்றனர். 2001 - ஆம் ஆண்டு முதல் அவர்கள் கிப்பத் செய்ய ஆரம்பித்தனர். எல்லா வகையான பொய்யான குற்றச்சாட்டுகளையும் அவர்கள் என் மீது கூறினார்கள். அதிலொன்று, நான் போதை

மருந்து மற்றும் பிற மருந்துகளை எடுத்துக்கொள்கிறேன் என்றும் அந்த மருந்துகளின் விளைவாகத்தான் நான் வெளிப்பாடுகளைப் பெறுவதாக கூறிவருகிறேன் என்றும் அவர் பிரச்சாரம் செய்தனர். இது உண்மையிலேயே சத்தியாமாகயிருந்தால், நான் எந்த வகையான மருந்தை எடுத்துக்கொள்கிறேன். என்பதை அறிய அவர்கள் விரைந்து வந்திருக்க வேண்டும். எந்த மருந்து எனக்கு இறை வெளிப்பாடுகளைப் பெற வைக்கிறது என்பதை அவர்கள் கூறவேண்டும்? மேலும் இது போன்ற மருந்துகளை எடுத்து இது போன்ற இறைவெளிப்பாடுகளை பெற முடியுமா என்று அவர்கள் முயற்சிக்க வேண்டும் ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள்? நான் பெறும் வெளிப்பாடுகளை சாத்தானிய வெளிப்பாடுகள் என்று அவர்கள் பெயரிட்டனர். இறைவன் பாதுகாப்பானாக! நவ்துபில்லாஹி மின் சாலிக்

அவர்கள் இவ்வாறு செயல்பட்டபோது, இந்த தீவுகளில் உள்ள மக்களை இஸ்லாம் மற்றும் அஹ்மதியா போதனைகளிலிருந்து திசைதிருப்பிவிட்டனர். இந்த மக்கள் என்னை வெறுத்து விடுவார்கள் என்றும் என்னை இந்த மக்கள் கைவிடுவார்கள் என்றும் அவர்கள் நினைத்தார்கள் ஆனால் இந்த மக்கள் இஸ்லாம் மற்றும் அஹமதியா நடைமுறையிலிருந்து விலகி சென்றனர். அவர்கள் ஒரு மாபெரும் வேலை செய்கிறார்கள் என்றும் அந்த மக்கள் தங்கள் பொய்களை நம்புவார்கள் என்றும் அவர்கள் நினைத்தார்கள். ஆனால் இந்த மக்களுக்கு முன்னால் அவர்கள் பெரிதும் அவமானப்பட்டனர். ஏனென்றால் அந்த மக்கள் என்னை நன்கு அறிந்திருந்தார்கள், அவர்களுடன் அந்த தீவுகளில் பல ஆண்டுகளாக நான் எப்படி கடினமாக உழைத்தேன் என்பதையும், நான் எப்படிபட்ட நபர் என்பதையும் அவர்கள் நன்கு அறிந்திருந்ததார்கள் அவர்களில் பலமக்கள் இவ்வாறுகூட சென்னார்கள் ஷேக் முனீர் அஸீம் போன்ற ஒருவர் ஜமாஅத்திலிருந்து வெளியேற்றப்பட்டார் என்று அஹ்மதியா மிஷனரி சென்னார் என்றால், நாம் இந்த ஜமா அத்தில் இருப்பதன் பயன் என்ன? அவர் மூலம்தான் இந்த ஜமா அத்தை நாம் அறிந்துகொண்டோம்.

அதுமட்டுமல்லாமல், ஒரு தீவில் சென்று ஒரு பெரிய குடும்பத்திடம் இவ்வாறு அறிவித்தவர்களும் உள்ளனர். அக்குடும்பம் என் மூலம்தான் ஜமா அத்தில் நுழைந்தனர். அவர்கள் நேர்மையானவர்கள் மற்றும் ஜமா அத்துக்காக பல தியாகங்களை புரிந்தவர்கள். எனவே அவர்களின் நல்ல புத்தகங்களில் அக்குடும்பம் இடம் பெற்றிருந்தது. அவர்களில்

ஒருவர் மொரீஷியஸில் உள்ள நீதிமன்றத்தில் நீதிபதியாகவும், மற்றொருவர் மொரீஷியஸில் ஒரு சிறந்த வழக்கறிஞராகவும் பணியாற்றுகின்றனர். இந்த தீவு மக்களின் முன்னால் அவர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொண்டார்கள், அம்மக்கள் அவர்களை மிகவும் மோசமாக பேசினார்கள். அவர்கள் செய்த மோசமான காரியங்களுக்கும் பேச்சுகளுக்கும் இந்த மக்கள் அவர்களை சபித்தனர். மேலும் அத்தீவு மக்கள் கூறியதாவது அவர்களின் அனைத்து தீய முயற்சிகளும் இருந்த போதிலும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் இந்த தீவுகளில் பெரிதும் முன்னேற்றமடைந்து வருகிறது அல்ஹம்துலில்லாஹ்! சும்ம அல்ஹம்துலில்லாஹ்.

இந்த தீய எண்ணம் கொண்ட மக்கள் எனக்கு சிக்கல்களை உருவாக்கி என் நற்பெயரை அழிக்க முயற்சித்த போது அந்த தீவுகளில் உள்ள மக்கள் ஜமா அத்தே அஹ்மதியா மீதான அன்பு மற்றும் நம்பிக்கையை இழந்தனர். 1990 முதல் 2000 வரையுள்ள காலங்களில் அந்த தீவுகளில் நான் நிறுவியதுதான் இந்த ஜமா அத்துகளனைத்தும்!.

கடந்த காலத்தில் நடந்த ஒரு விஷயம், எதிர்கால நிகழ்வுகளுக்கான ஒரு எச்சரிக்கையாகும். ஆகவே இது போன்ற நயவஞ்சகர்கள் அல்லாஹ்வின் வழியில் உழைக்கும் ஒருவரை தாக்குகிறார்கள் என்பதும் ஜமா அத்துக்காக முற்றிலும் உழைக்கும் மற்ற பொறுப்பாளர்களையும் தக்குகிறார்கள் என்பதும் வெறுக்கத்தக்க செயலாகும் வெறுப்பு, பொறாமை, புறங்கூறுதல் போன்றவற்றை விதைப்பதன் மூலம்தான் இவையனைத்தும் நிகழ்கிறது.

எனவே முஹபத் மற்றும் கிப்பத் ஒன்றாக இருக்க முடியாது. அன்பிற்கும் நேசத்திற்கும் புறங்கூறுதலுடன் எந்த தொடர்பும் இருக்க முடியாது. புறங்கூறுவதை எதிர்த்துப் போராட பல வழிகள் உள்ளன. அதை செய்வதற்கான ஒரு எளிய வழி என்பது மற்றவர்களுடன் அன்பின் உறவை ஏற்படுத்துவதோடு, அல்லாஹ்வின் வழியில் இரவும் பகலும் உழைப்பவர்களின் அன்பைப் பெற முயற்சிப்பதும், ஜமா அத்தை முன் நடத்தி செல்பவர்களுடன் அதாவது உண்மையுள்ள மற்றும் தக்வாவுடன் அல்லாஹ்வின் ஜமா அத்திற்காக செயல்படுபவர்களுடன் அன்பும் மற்றும் மரியாதையுடன் நெருங்கியிருப்பதும் ஆகும்.

இந்த சிந்தனையை நீங்கள் மனதில் கொண்டிருக்க வேண்டும். நாங்கள் சுதந்திரமாக இருக்கிறோம், நம்முடைய தனிப்பட்ட வேலைகளைச் செய்கிறோம். அதே சமயம் ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் அவர்களின் கடமையான மார்க்க வேலை செய்கிறார்கள் (என்று எண்ண வேண்டாம்) மாறாக நாம் அவர்களுடன் ஒரு நல்ல உறவை வைத்திருந்தால், அது அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கான ஒரு வழியாகும். அல்லாஹ்வின் திருப்தியை பெறும் பொருட்டு நாம் அவர்களுடன் ஒரு நல்லுறவை வைத்திருப்போம்.

இவ்வாறு மக்கள் சிந்தித்தால், அவர்கள் உள்ளபூர்வமாக ஜமா அத்தின் பொறுப்பாளர்களிடம் மரியாதைக்குரிய ஒரு உறவை ஏற்படுத்துவார்கள். அந்த பொறுப்பாளர்கள் தங்களைவிட இளமையாக இருந்தாலும் கூட! நிச்சயமாக அல்லாஹ்வின் திருப்தியை பெறும் பொருட்டு அவர்கள் அவர்களுடன் அன்பின் வலுவான ஒரு சகோதர அல்லது சகோதரி உறவை உருவாக்க முயர்சிப்பார்கள். இந்த அன்பு உங்களுக்கு இயல்பாக இல்லாவிட்டாலும், அதை உங்களிடையே வளர்க்க நீங்கள் முயற்சிக்கவேண்டும். சில நேரங்களில் மரியாதை அன்பாக மாறுகிறது, சில நேரங்களில் அன்பு மரியாதையாக மாறுகிறது. இவ்விஷயம் இயற்கையாகவே நடக்கிறது. அழகின் வெளிப்படுத்தலைத் தொடர்ந்து உருவாகும் இயற்க்கை அன்பைப் பற்றி நான் பேசவில்லை, ஒருபோதுமில்லை. மாறாக சில அன்புக்குரியவர்கள் மூலம் பெறப்படும் அன்பைப் பற்றியே நான் பேசுகிறேன். ஒரு பொருள் மீதான பாசத்தின் காரணமாக அப்பொருள் மீது உங்களின் அன்பு வெளிப்படுகிறது. அதாவது நீங்கள் விரும்பும் ஒரு பொருளில் குடிகொள்ளும் அனைத்து காரியங்கள் மீதும் நீங்கள் அன்பை வைத்திருப்பீர்கள். உங்கள் அன்பு ஒரு நபர்மீதாக இருந்தாலும் சரி! அல்லது மதத்தின் வேலைகள் மீதாக இருந்தாலும் சரி! நீங்கள் ஒருவரிடம் அன்பு வைத்திருந்தால், அந்த நபருடன் இணைந்திருக்கும். அனைத்து விஷயங்கள் மீதும் உங்களுக்கு அன்பு இருக்கும் அந்த நபர் உங்களை நேசித்தால், நீங்களும் அவரை நேசிப்பீர்கள் உங்களிடம் இயற்க்கையாக அன்பு இல்லை என்ற போதிலும் நீங்கள் அவரை நேசிப்பீர்கள் மேலும் அந்த நபருடன் இணைந்திருக்கும் எல்லாவற்றையும் நீங்கள் நேசிப்பீர்கள். இத்தகைய ஒரு அன்பை நீங்கள் வளர்த்துக் கொள்கிறீர்கள். (ஹுசூர் அவர்கள் லைலா மஜ்னுவின் உதாரணத்தை மேற்கோள் காட்டினார்.) இது ஒரு காவிய காதல் கதையாகும், அங்கு

மஜ்னு, லைலா மீதான தனது அன்பின் காரணமாக லைலாவின் நாய்மீது கூட அன்பை வளர்த்துக்கொண்டார்.) இது ஒரு உண்மை. அதாவது அன்பு வெறித்தனத்தின் நிலைக்கு மாறும் அளவுக்கு அதிகரிக்கும் பொழுது, நீங்கள் விரும்பும் நபர்களுடன் இணைந்திருக்கும் எல்லாவற்றையும் நீங்கள் நேசிப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை. அதிலிருந்து வேறுவிதமாக யாருக்கும் செய்ய முடியாது ஏனெனில் அது அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது.

எனவே நான் முஹபத் பற்றி உங்களுக்கு சொல்லும் போது நான் உங்களுக்கும் எந்த பாசங்குத்தனத்தையும் கற்பிக்கவில்லை. மாறாக நான் உங்களுக்கு ஒரு ஆழமான உண்மையைச் சொல்கிறேன். அன்பு உங்கள் பந்தங்களில் மிக பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் ஒன்று என்பதையும் நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். அதனால்தான் நான் பலமுறை சஹாபாக்களின் உதாரணத்தை உங்கள் முன்வைத்திருக்கிறேன். சஹாபாக்களிடம் இருந்த அன்பு உண்மையில் அசாதாரணமானது. இன்று உலகில் பலரும் அந்தளவு பெரிய அன்பைக் கொண்டிருப்பதாக உரிமை கோருகிறார்கள் ஆனால் சஹாபாக்களில் தென்பட்ட அன்பு அதற்கப்பாற்பட்டதும், மிக பெரிய இயல்புடையதும் ஆகும். அவர்களின் கண்களில், அவர்களின் முகங்களில், அவர்களின் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அன்பு இருந்தது. அவர்களின் உடலின் ஒவ்வொரு பகுதியும் அந்த அன்பிற்கு சாட்சியமளித்தது. அதனால்தான் ஆரம்பத்தில், நான் பயணம் செய்து என் சீடர்களை சந்தித்த போது, குறிப்பாக தீவுகள் மற்றும் ஆப்பிக்கா நாடுகளில் உள்ள எனது சீடர்கள் என் கையைப்பிடித்து முத்தமிட்டனர். அன்று நான் அதைப்பற்றி மிகவும் வெட்கப்பட்டேன். உண்மையில் அவர்கள் மிகுந்த அன்பையும் பாசத்தையும் காட்டினர்கள். ஆனால் அந்த நேரத்தில் அவர்களின் அந்த பாசக்காட்சியைக் கண்டு நான் வெட்கபட்டேன். அந்த மனிதர்கள் காட்டிய பாசம் என்ன என்பது எனக்கு நான்றாக புரியவில்லை. நான் ஆச்சரியப்பட்டேன். இது ஷிர்க் இல்லையா? ஆனால் அவர்களின் அந்த மரியாதையையும் அவர்களின் முகங்களில் உள்ள அன்பையும் பாசத்தையும் பார்த்து நான் அமைதியாக இருந்தேன்".

இது தொடர்பாக நான் பிரார்த்தனை செய்தபின் அல்லாஹ் எனக்கு புரியவைத்தான். அதாவது ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்), ஹஸ்ரத் மஸீஹ் மௌஊத் (அலை) மற்றும்

இஸ்லாத்தின் போதனைகள் மீது அவர்கள் கொண்டுள்ள அன்பும் பாசமும் மிகவும் பெரிதாக இருந்து என்றும் அதைபோலவே இவர்களின் காலத்தில் தோன்றிய அல்லாஹ்வின் தூதரிடம் இவர்களும் மிகுந்த அன்பையும் பாசத்தையும் காட்டினார்கள் என்றும் நான் உணர்ந்து கொண்டேன். ஆனால் மற்றவர்களைப் பொறுத்தவரை, அல்லாஹ் அவர்களுக்கும் இந்த அருளை வழங்கியிருந்தும், அவர்கள் அதற்கு புறம்திரும்பிசென்றனர். இந்த உண்மையை அங்கீகரித்தவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் பல சோதனைகளைச் சந்தித்தாலும் அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள் மேலும் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அந்த சஹாபாக்களை போலவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் அந்த சஹாபாக்களைப் போலவும் நாங்களும் அதிர்ஷ்டசாலிகள் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

**உங்கள் மத்தியில் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட ஒருவர் இருக்கிறார், அல்லாஹ் அவருடன் பேசுகிறான். நபிகரீம் (ஸல்) அவர்களின் போதனைகளுக்கு புத்துயிர் வழங்குவதற்கும், மனித குலத்தை முழுமையாக ஏக இறை நம்பிக்கையில் ஒன்றிணைப்பதற்கும் அல்லாஹ் அவரை அனுப்பிவைத்திருக்கிறான்.**

**கோடிக்கணக்கான மக்களிடையே, இன்று என்னை பின்பற்றுபவர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். ஏனெனில் இறைவெளிபாடுகளுக்கு சாட்சியாகும் அளவிற்கு அவர்கள் மேன்மை அடைந்துள்ளனர். அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அல்லாஹ் எவ்வாறு தெய்வீகவெளிப்பாடுகள் வழங்குகின்றான் என்பதற்கும், அல்லாஹ் தனது செய்திகளை எவ்வாறு இறக்குகின்றான் என்பதற்கும் அவர்கள் சாட்சியாகயிருக்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு தனது தூதர் மூலம் அறிவுறுதல்கள் மற்றும் செய்திகளை வழங்கும்போது அவர்கள் அதை அருளுக்குரியதாக எடுத்துக்கொள்கிறார்கள், தங்கள் அதிர்ஷ்டத்தை அவர்கள் உணர்கின்றார்கள். அவர்கள் கவலைப்படுவதில்லை, அவர்களின் சீர்த்திருத்ததிற்கு அத்தகைய இறைசெய்திகளை நேரடியாக அல்லது மறைமுகமாக சுட்டிக் காட்டியிருப்பதாக அவர்கள் உணர்ந்து கொள்கிறார்கள். அத்தகைய இறைசெய்திகளை ஒரு அருளாக அவர்கள் எடுத்துக் கொண்டு அவர்கள் கீழ்ப்டிகிறார்கள்.**

ஆகவே, அல்லாஹ்விடமிருந்து இந்த செய்தியை நான் நன்கு புரிந்துகொண்ட போது என் சீடர்கள் என் கையை உறுதியாகப் பிடித்து இப்போது முத்தமிடும் போது நான் வெட்கப்படவில்லை. என் கைணை முத்தமிடும் மற்றவர்களும் இருக்கிறார்கள், இவை அனைத்தும் எனது தோழர்கள் கலீ∴பத்துல்லாஹ் மீதான தங்கள் அன்பை வெளிப்படுத்துவதாகும். எனவே, இந்த நூற்றாண்டின் அல்லாஹ்வின் கலீ∴பாவுடன் அவர்கள் காண்பிக்கும் அவர்களின் அன்பில் தென்படும் நேர்மையை புண்படுத்துவது எனக்கு சரியானதல்ல என்பதை நான் உணர்கிறேன் அல்ஹம்துலில்லாஹ்.

எல்லாம் வல்ல அல்லாஹ் எப்பொழுதும் எந்தவொரு பாசங்குதனமும் இல்லாமல், எந்தவொரு வெளிவேஷமும் இல்லாமல் அவனது கலீபாவுடன் நேர்மையாக இருக்க உங்களுக்கு வழிவகுப்பானாக ஆமீன். இன்ஷா அல்லாஹ், எனது வெள்ளிக்கிழமை பேருரையின் மற்றபகுதியை அடுத்த வாரம் தொடருவேன்.

முடிவடைவதற்கு முன்பு, நமது சகோதரி ரசியா சாஹிபா, நமது சகோதரர் K.P. சம்சுதீன் சாஹிப் மற்றும் மற்றொரு சகோதரி ஆகியோருக்காக துஆ செய்யுமாறு ஹுஸூர் வேண்டுகோள் விடுத்தார்.

**Translated by:**

*Naib Amir* **Azim Ahmad**

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**